# பத்திரிக்கை செய்தி

## சிட்டாவில் பெயர் நீக்கம் செய்ய ரூ.20,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தனியார் அலுவலர் கைது

புகார்தாரர் திரு.கணேசமூர்த்தி, பூசலிகோட்டை, மிட்டா நூலஹல்லி கிராமம், தருமபுரி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது தாத்தாவிற்கு சொந்தமான 18 சென்ட் நிலத்தின் சிட்டாவில் தவறுதலாக திரு.கமலேஷன் என்பவரின் பெயர் சேர்க்கப்பட்டிருந்ததால் அந்த பெயரினை நீக்கம் செய்வதற்காக நூலஹல்லி கிராம நிர்வாக அலுவலகம், தருமபுரி தாலுகா, தருமபுரி மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். திரு.வெங்கடேசன், கிராம நிர்வாக அலுவலர், நூலஹல்லி கிராம நிர்வாக அலுவலகம், தருமபுரி தாலுகா, தருமபுரி மாவட்டம் அவர்கள், விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து புகார்தாரருக்கு சிட்டாவில் பெயர் நீக்கம் செய்ய தனக்கு ரூ.20,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், தருமபுரி மாவட்ட லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 05.01.2024, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.வெங்கடேசன், கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் உத்தரவின்படி திருமதி.அமுதா, தனியார் அலுவலர் அவர்கள் லஞ்ச பணம் ரூ.20,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

# **PRESS NOTE**

## **VILLAGE ADMINISTRATIVE OFFICER AND PRIVATE INDIVIDUAL WERE ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.20,000/- FOR REMOVING NAME IN CHITTA**

The complainant Tr.Ganesamurthy, is residing at Poosalikottai, Mitta Noolahalli Village, Dharmapuri District. The complainant had applied at Noolahalli Village Administrative Office, Dharmapuri Taluk, Dharmapuri District for deleting the name of one Tr.Kamalesan whose name was mistakenly included in the Chitta in respect of 18 cents of land owned by complainant grandfather. Tr.Venkatesan, Village Administrative Officer, Noolahalli Village, Dharmapuri, demanded bribe of Rs.20,000/- for removing name in Chitta. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Dharmapuri detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (05.01.2024). During trap proceedings, on the instructions of Tr.Venkatesan, Village Administrative Officer, Tmt.Amudha, Private individual received the bribe amount of Rs.20,000/- from the complainant. Both accused were arrested.